**நவகத்தேகம பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நவகத்தேகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(I) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய 19 கணக்குகளின் மொத்த மீதி ரூபா 11,083,841 ஆவதோடு அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்த மீதி ரூபா 95,055 ஆகும் | பெறப்பட வேண்டிய கணக்குகளின் மீதிகள் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம் 2014 செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 08 தொழில்கள் தொடர்பாக இன்னுமாக பெறவேண்டிய நிலுவை ரூபா 95,055 அறவிடல் தொடர்பாக எழுத்து மூலமாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**(II) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய 09 கணக்குகளின் மொத்தம் ரூபா 3,698,610 ஆக இருந்ததோடு, அதில் 4 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் ரூபா 80,005 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2014 வருடத்தில் செயற்படுத்தப்பட்ட வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம் செயற்திட்டத்தின் கீழுள்ள தொழில்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 95,082 ஆன பெறுமதி செலுத்த முடியாது போனதற்கான காரணம் அதற்கான நிதி ஏற்பாடு கிடைக்காததனால் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல அத்தாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்த பெறுமதி ரூபா 45,837,369 ஆன 02 கணக்கு விடயங்களுக்குரிய அத்தாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தொடர்புடைய அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | மர பொருட்கள் பொருத்துதல் தொடர்பான ஆவனமொன்று காணப்படாததனால் அதற்காக ஆவனமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என்பதை தயவுடன் தெரிவித்து கொள்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) | 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | | |
| | விதி இலக்கம் 5(3) | வருமானங்களை சேர்த்தல் தொடர்பாக | உள்ளக கணக்காய்வு | 2019 வருடத்தில் அது சரியாக மேற்கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளக ஆய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | மேற்கொள்ளல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ii) | விதி இலக்கம் 5(7) | நிதி மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக சம்பூரண கால கட்டம் உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளல் வேண்டும். | நிதி மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக சம்பூரண கால கட்டம் உள்ளடங்கும் வகையில் உள்ளக கணக்காய்வு செயற்படுத்த முடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,753,151 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,415,682 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா’000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரியும் வரியும் | 386 | 488 | 467 | 21 | 314 | 414 | 420 | - |
| (ii) | வாடகை | 1,699 | 4,052 | 4,031 | 22 | 1,699 | 1,317 | 1,317 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 149 | 208 | 208 | - | 89 | 149 | 149 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,188 | 2,312 | 1,059 | 1,253 | 3,188 | 1,063 | 1,063 | - |
| | மொத்தம் | 5,422 | 7,060 | 5,765 | 1,296 | 5,290 | 2,943 | 2,949 | - |

❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புக்கள் மற்றும் கடந்த வருடங்களின் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புக்களும் உள்ளடங்கியுள்ளது.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கு மொத்த பட்டியலிடப்பட்ட வருமானம் சபையின் மொத்த வருமான ரூபா 7,060,631 ஆவதுடன் வருடத்தினுள் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 5,765,131 சேகரிக்கப்பட்டு இருந்தது. அதன் படி வருடத்தினுள் மொத்த வருமான சேகரிப்பு முன்னேற்றம் 82 சதவீதமாக காணப்பட்டது. | நிலுவை வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துக்கள் முன்வைக்கப்பட்எருக்கவில்லை . |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) இடைக்கால சட்டவாக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக இடைக்கால சட்டவாக்கங்கள் இயற்றப்பட வேண்டும். எனினும் 2018 திசெம்பர் 31 திகதி வரையிலும் 15 விடயங்களுக்காக மட்டும் இடைக்கால சட்டவாக்கம் அயற்றப்பட்டிருந்தது. | அனைத்து பிரதான விடயங்களுக்காகவும் இடைக்கால சட்டவாக்கம் இயற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) நிதிஏற்பாடு செய்யாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கமைய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த மதீப்பீட்டு பெறுமதி ரூபா 27,700,000 ஆன 08 பணிகளுக்காக வருடாந்த வரவு செலவீனூடாக நிதி ஏற்பாடு செய்யப்படாததனால் அப் பணிகளை செயற்படுத்த முடியாதிருந்தது. | செயற்பாட்டு திட்டத்திற்கமைய வரவு செலவீனூடாக நிதி ஏற்பாடு செய்தல் வேண்டும். | வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருப்பினும் செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்வதற்கு முடியாது போனது என தயவுடன் தெரிவிக்கிறேன். மத்திய அரசிலிருந்து மற்றும் மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி கொடை 2018 ஆம் வருடத்தினுள் கிடைக்கவில்லை என குறிப்பிடகிறேன். |

**(இ) செயற்படுத்தாத பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த வரவு செலவீனூடாக ரூபா 499,000 ஆன நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 10 பணிகள் வருடத்தினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடு பணம் வினைத்திறாக மற்றும் பயனுள்ளவாறு பயன்படுத்தல் வேண்டும். | குடா தொடம் அத்தேவ நீர் செயற்திட்டம் மற்றும் கிழமை சந்தை பூமி தயாரித்தல் போன்ற செயற்திட்டங்களுக்காக நிதியில் நிதி நிலைமை போதாததனால் செயற்படுத்த முடியாது போனது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் நவகத்தேகம பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் ராபீஸ் மறுப்பு நிகழ்ச்சித் திட்டம் 2018 வருடத்தினுள் செயற்படுத்தாததனால் செலவு ஏற்கப்பட முடியாது போனது. மற்றைய நிகழ்ச்சி திட்டங்கள் 2018 வருடத்தினுள் செயற்படுத்த |

| | | இயலாததை ஏற்றுக்கொள்கிறேன். |
|---|---|---|

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கழிவு முகாமைத்துவ செயற்பாடொன்று ஆரம்பிக்காது நகரத்தில் சேர்க்கப்படுகின்ற கழிவுகள் திறந்த பூமிக்கு கொட்டுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முறையான திண்மக்கழிவு முகாமைத்துவ வேளை ஒழுங்குமுறை ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். | தற்போது திண்மக்கழிவு வேறுபடுத்தி சேர்க்கப்படுகிறதோடு உக்கக்கூடிய கழிவுகள் தனியார் வாங்குனருக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றது என குறிப்பிடுகின்றேன். உக்காத கழிவுகளில் பகுதியொன்று வேறு தனியார் வாங்குனருக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இருப்பாகும் கழிவுகள் மட்டும் தரை நிரப்புதலுக்காக செலுத்தப்படுகிறது என தயவுடன் தெரிவிக்கின்றேன். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030” பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கான ஆயத்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (i) சபையினால் 06 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக 22 இலக்குகள் அடையாளப்படுத்தப்பட்டு, அந் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையப்பட பல செயற்பாடுகள் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு தேவையான இலக்குகளை அடைதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) மீளாய்வாண்டினுள் அதிகாரத்திற்குற்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்குகளில் 50 சதவீதம் சூரிய ஒளியினால் ஒளி உற்பத்தியாக்கும் வீதி விளக்குகளாக உருவாக்கல் மற்றும் பொது மக்கள் நூலகத்திற்காக இணைய வசதியினை பெற்றுக்கொடுத்தல் போன்ற இலக்குகளை | சூரிய ஒளியினால் ஒளி உற்பத்தியாக்கும் வீதி விளக்குகளாக உருவாக்கல் மற்றும் பொது மக்கள் நூலகத்திற்காக இணைய வசதியினை பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை | அதிகாரத்திற்குற்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்குகளில் 50 சதவீதம் சூரிய ஒளியினால் ஒளி உற்பத்தியாக்கும் வீதி விளக்குகளாக உருவாக்கல் நிறைவடைவதற்கு 2030 |

| | | |
|---|---|---|
| செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். | இல் எதிர்பார்க்கப்படுகிறது. பொது மக்கள் நூலகத்திற்காக இணைய வசதியினை பெற்றுக்கொடுப்பதற்கு 2020 இல் எதிர்பார்க்கப்படுகிறது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வருடத்தினுள் வருமானம் ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தலில் அல்லது புதிய வருவாய் ஈட்டும் வழிகளுக்கு கவனம் செலுத்தப்படவில்லை. | புதிய வருவாய் ஈட்டும் வழிகளுக்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டு நிறைவில் நவகத்தேகம நகர பகுதிக்குள் வரி பிரதேசமாக மதிப்பிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ் அய்வு அறிக்கை தற்போது மதிப்பீட்டு திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது என தயவுடன் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) | பொது சந்தை வளாகத்தின் மேல் மாடி மற்றும் பஸ் தரிப்பிடத்தின் மேல் மாடியின் நிர்மாண பணிகள் 2017 ஆம் வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும் 2018 வருடத்தில் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் கட்டிடம் குத்தகைக்கு கொடுப்பதற்கு முடியாது காணப்பட்டது. | தொடர்புடைய நிர்மாண பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடங்கள் குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பஸ் தரிப்பிடத்தின் மேல் மாடிக்கு தற்போது மின்சார இணைப்பு பெறப்பட்டுள்ளதுடன் அது குத்தகைக்கு கொடுப்பதற்காக டெண்டர் அழைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொது சந்தை வளாகத்தின் மேல் மாடிக்கு மின்சார இணைப்பு பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 யூன் 14 ஆம் திகதி மக்களின் உரிமைக்கு கொடுக்கப்பட்டிருந்த நவகத்தேகம பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காணியொன்றில் நிர்மனணிக்கப்பட்ட நவகத்தேகம திரையரங்கு கட்டிடத்திற்காக நிதியில் ரூபா 300,204 செலவிடப்பட்டிருப்பினும் 2019 மார்ச் மாதம் வரையிலும அத் திரையரங்கை நவகத்தேகம பிரதேச சபைக்கு கையகப்படுத்தி கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய சொத்து விரைவில் கையகப்படுத்தி கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நவகத்தேகம திரையரங்கு கட்டிடம் நவகத்தேகம பிரதேச சபைக்கு கையகப்படுத்தி கொள்ளவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை நவகத்தேகம பிரதேச செயலாளரினால் எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவி வெற்றிடமாக இருந்த சபையின் செயலாளர் பதவி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இரண்டாம் வகுப்புக்கு சொந்தமான நூலகர், முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் தலா 01 வீதம் மற்றும் முதன்மை தரத்திற்கு சொந்தமான குழாய் கிணறு தொழில்நுட்ப வல்லுனர் , மின்சார பொறியியலாளர் பதவிகள் தலா 01 வீதம் வெற்றிடங்களாக உள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துக்கள் முன்வைக்கப்படவில்லை. |

**3.4 செயற்படாத மற்றும் குறை பாவனையுள்ள சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நவகத்தேகம பிரதேச சபை மற்றும் வர்ல்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் நிதி பங்களிப்பினால் நிர்மாணிக்கப்பட்டு 2014 ஏப்ரல் 23 | பொருத்தமான திட்டத்தை செயல்படுத்த வேண்டும். | இது 2014 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட செயற்திட்டமாகும். 2018 |

| | | |
|---|---|---|
| திகதியிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற சுகாதார பாதுகாப்பான மின்சார நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட ரூபா 1,163,600 ஆன உபகரணம் செயலற்ற நிலையில் காணப்பட்டது. அத்துடன் ரூபா 325,000 ஆன இரு சொத்துக்கள் பல வருடங்களாக செயலற்ற நிலையில் காணப்படுகின்றன. | | வருடத்தினுள் அரசினால் RO நீர் வடிகட்டி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தல் மற்றும் தனியார் துறையினால் RO நீர் வடிகட்டி பொருத்தப்பட்டு பகிருவதங்கு ஆரம்பித்ததனால் பிரதேச சபையின் நீர் சுத்திகரிப்பின் கேள்வி குறைந்து வருமானம் விரைவில் குறைந்ததுடன் செயற்திட்டத்திற்கு நீர் பெற்றுக்கொள்ளப்பட்ட **சமூகம் சார்ந்த நீர் வழங்கல் அலக**ின் நீர் அதிகளவு உப்புத்தன்னையினால் பொருத்தப்பட்டிருந்த இயந்திரம் செயலற்று போனது. இந்த இயந்திரம் ஏலம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.5 வாகன பயன்பாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 03 வாகனங்கள் 2018 ஆம் வருடத்தில் விபத்திற்குட்பட்டு அதற்காக காப்புறுதி இழப்பீடு பெறப்பட்டிருப்பினும் அது தொடர்பாக நி.பெ 104 பிரகாரம் பாதிப்பு தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும். | 2018 வருடத்தினுள் 03 வாகனங்கள் விபத்திற்குட்பட்டதுடன் அதன் நட்டம் ரூபா 53,700 ஆகும். இவ் வாகனங்கன் விபத்திற்குட்பட்டதற்கான காரணம் ஓட்டுனருக்கு கட்:படுத்த முடியாததனால் ஆகும். அதனால் நட்டத்தில் காப்புறுதி நிறுவனத்திடமிருறந்து ரூபா 49,740 பெறப்பட்டிருந்தது. |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நவகத்தேகம பஸ் தரிப்பிட வியாபார வளாகம் மேம்படுத்தல் 2017 கீழான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பஸ் தரிப்பிடத்தில் கடைகள் 2017 ஒக்டோபர் 13 இல் இருந்து 2017 திசெம்பர் 28 காலத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு ஒப்பந்தத்தின் படி செய்யப்படாத சில வேலை விடயங்கள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டு அதற்காக மட்டும் கொடுப்பணவு செய்யப்பட்டிருந்நது. பூர்த்தி செய்யப்பட்ட பகுதிகள் பயனுள்ளதாக பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படவில்லை. | நிதி ஏற்பாடுகளை தேடி தொடர்புடைய பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். | நவகத்தேகம பஸ் தரிப்பிட வியாபார வளாகமத்தின் மிகுதி வேலைகள் பூர்த்தி செய்யப்படுவதற்காக தொடர்புடைய அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடு கோரப்பட்டுள்ளது. 2018 வருடத்தினுள் அதற்காக நிதி ஏற்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வரவு செலவு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 29 வரவு செலவு விடயங்களின் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு நூற்றுக்கு நூறு சதவீதம் எஞ்சி காணப்பட்டது. | இலக்கை அடையக்கூடிய வரவு செலவு ஆவணமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | கருத்துக்கள் முனவைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2018 வருடத்தின் இறுதி காலாண்டிற்காக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும். | 2018 இரண்டாம் காலாண்டிற்காக உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள முடியாது போயுள்ளது. 2019 வருடத்தினுள் உள்ளக கணக்காய்வு முறையாக மேற்கொள்ளப்படும் என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |